அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை : 20/2020

எனது இலக்கம் : EST-1/MISCL/06/0032

பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2020.10.28

அமைச்சுக்களினது செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்ட செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்கள்
பிரதேச செயலாளர்கள்
அரச கூட்டுத்தாபன, நியதிச் சட்டச் சபைகளின் தலைவர்கள்

## அரச சேவையை தடையின்றி நடாத்திச் செல்லல்

அரசினால் நடைமுறைப்படுத்தப்படும் கொவிட் 19 வைரஸ் பரவலைத் தடுப்பதற்கான வேலைத்திட்டங்களுக்கு இணையாக ஏனைய அரச சேவைகளையும் தங்குதடையின்றி நடாத்திச் செல்லும் தேவைப்பாடு எழுந்துள்ளது. நிலவும் நிலைமை தொடர்பாக அவதானத்தைச் சமர்ப்பித்து அர்ப்பணிப்புடன் தமது கடமை நடவடிக்கைகளை அதிகபட்சமாக நிறைவேற்றுவதற்குச் சகல அரசாங்க உத்தியோகத்தர்களதும் அவதானம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என இத்தால் வலியுறுத்துகின்றேன்.

02. கொவிட் 19 வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் பொருட்டு அரச நிறுவனங்களின் தலைவர்களினால் கடைப்பிடிக்கப்பட வேண்டிய அறிவுரைகள் உள்ளடக்கப்பட்டு, ஜனாதிபதியின் செயலாளரினால் வெளியிடப்பட்டுள்ள 18.04.2020 ஆந் திகதிய PS/GPA/චක්‍රලේඛ/20/2020 என்னும் இலக்கமுடைய சுற்றுநிருபம் மற்றும் 14.05.2020 ஆந் திகதிய PS/GPA/චක්‍රලේඛ/21/2020 என்னும் இலக்கமுடைய சுற்றுநிருபங்களுக்கு அவதானத்தைச் சமர்ப்பித்து, இச்சுற்றுநிருபங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளின் படி உத்தியோகத்தர்ளைச் சேவையின் பொருட்டு அழைத்தல் மற்றும் நிறுவனங்களை நடாத்திச் செல்லுதல் வேண்டும் என்பதுடன், அச்சுற்றுநிருபங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அரச உத்தியோகத்தர்களதும் மற்றும் பொது மக்களதும் சுகாதாரப் பாதுகாப்பின் பொருட்டு கடைப்பிடிக்கப்பட வேண்டிய சகல சுகாதார அறிவுரைகளும் பின்பற்றப்படல் வேண்டும் எனவும் இத்தால் அறியத் தருகின்றேன்.

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிறி

செயலாளர்
பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு